**அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த கடன் தொகைக்காக செலுத்த வேண்டியிருந்த தவணைப் பணம் மற்றும் வட்டி ரூபா 342,246 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை சம்பள மீளளிப்பு என கிடைத்திருந்த ரூபா 536,834 தொகை திரண்ட நிதிக்கு செலவு வைக்காமல் ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது மிகையாக கிடைத்திருந்த ரூபா 10,289 தொகை பொறுப்பு ஒன்றென கணக்கீடு செய்யாமல் வருமானம் ஒன்றொன கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சம்பள மீளளிப்புப் பெறுவனவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 991,400 தொகை மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மூலதன செலவுகள் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | மீண்டுவரும் செலவு விடயத்தின் கீழ் பதிவு செய்து தவறினை சரி செய்யப்படும் என. | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திலிருந்து பின்னர் அறவீடு செய்யும் கடன் அடிப்படையில் வழங்கியிருந்த ரூபா 1,000,000 தொகை பொறுப்பு ஒன்றென கணக்கீடு செய்யாமல் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது சரியான வருமானத் தலைப்பிற்கு உட்படுத்தப்படும் என. | வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டிற்காக மாகாண வருமானத் திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்படாத ரூபா 390,030 இற்கான நீதிமன்றத் தண்டப் பணம் பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பெறுமதி முழுமையாக அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 71,830 தொகை பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதற்குரிய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 3,329,612 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசம் எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 2,699,144 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என மற்றும் சில மீதிகள் தொடர்பாக விபரங்கள் கண்டறிய முடியாமல் இருக்கின்றது என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) | 2013 ஆண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 04 பிரிவுகள் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்டு 10 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | காலவதியாகிய 2004 மற்றும் 2019 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 254,150 இற்கான 28 டென்டர் பிணை வைப்பு மீதிகளை ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைப்பு மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்படுவதனால் ஆதனவழிப்பு செய்தல் சிக்கலுடன் காணப்படுகின்றது என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2022 ஜனவரி 22 திகதி 2264/18 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய 22 வியாபார அலகுகள் அவ்வாறு செய்யாமையால் ரூபா 108,900 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி கடிதமூலம் அறிவிக்கப்பட்டது என. | சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2019 ஜுன் 27 ஆந் திகதிய 05/2019 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 03 | இறந்த ஊழியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 252,083 இற்கான விழா மற்றும் இடர் கடன் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இறப்பு பணிக்கொடையில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,210,453 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,421,128 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 852,000 | 1,366,805 | 1,391,075 | 6,760 | 802,000 | 747,070 | 781,430 | 31,030 |
| வாடகை | 20,846,320 | 13,104,557 | 13,039,449 | 296,022 | 13,966,850 | 13,401,004 | 13,654,221 | 230,914 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,258,020 | 3,605,561 | 3,705,442 | 26,000 | 2,499,480 | 3,088,621 | 3,224,565 | 125,881 |
| ஏனைய வரு மானங்கள் | 23,503,170 | 4,564,766 | 8,610,376 | 71,830 | 143,796,662 | 46,610,639 | 45,279,519 | 4,117,440 |
| மொத்தம் | 48,459,510 | 22,641,689 | 26,746,342 | 400,612 | 161,064,992 | 63,847,334 | 62,939,735 | 4,505,265 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மீன்கடையை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக ரூபா 197,197 இற்கான வருமானம் ஒன்று மற்றும் பிரதான செயலாளரிடம் மற்றும் முத்திரைக் கட்டணம் என முறையே ரூபா 2,251,757 தொகை மற்றும் ரூபா 3,758,064 தொகை பெற வேண்டிக் காணப்பட்டது. | கடை வாடகை தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது மற்றும் பெற வேண்டிய நிலுவை நீதிமன்றத் தண்டப் பணத் தொகையில் ரூபா 383,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை நீதிமன்றத் தண்டப் பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட்ட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்ட 5 லங்காபெல் தொலைபேசி தொடர்பாக துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அதன் நிரந்தரக் கட்டணம் என மாதாந்தம் ரூபா 500 வீதம் கொடுப்பனவு செய்ததன் மூலம் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 102,500 தொகை காணப்பட்டதுடன் அது பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான நட்டங்கள் மற்றும் சேதங்களை இனங்கண்டவுடனேயே சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 03 கட்டிட வரைபுகள் தொடர்பாக அணவல் அங்கீகாரம் வழங்கும் கட்டணம், ஒழுங்குபடுத்தல் கட்டணம், இணக்கச் சான்றிதழ் கட்டணம் என கூட்டுத்தொகை ரூபா 1,199,428 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமல் வர்த்தக அலுவல்கள் நடாத்திச் செல்ல முடியாது எனினும், மூன்று கட்டிடங்களினதும் நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வியாபார அலுவல்கள் நடாத்தப்பட்டு வருவதனால் அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட கட்டணத்தை சபைக்கு செலுத்தும் படி உரிய தரப்பினருக்கு கடிதங்களின் மூலம் அறிவுறுத்தப்பட்டது என. | குறிப்பிட்ட கட்டணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 142 காணிகளின் சட்டபூர்வமான உரிமை மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி அறுதியாக குறிப்பிடப்பட்டிருக்காத 04 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 செயற்திட்டங்கள், கருமங்கள் அல்லது மூலதன வேலைகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 19 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 35 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விடயங்கள் மேற்கொள்ளப்படாமையால் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சிலிருந்து ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் செயற்படுத்த முடியாமல் போனது என. | பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

**3.5 குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் மூலம் ஆண்டின் போது செயற்படுத்துவதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த கருமங்களை செயற்படுத்தாமல் அந்த ஏற்பாடுகள் மூலம் ரூபா 1,433,077 தொகை செலவிடப்பட்டு ஏனைய கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருந்து. | எதிர்காலத்தில் பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட கருமங்களை சரியாக இனங்கண்டு செலவீடுகள் மேற்கொள்ளப்படும் என. | பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் குறிப்பிட்ட கருமங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் முறையே 68 மற்றும் 80 ஆகக் காணப்பட்டமையால் 16 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதவியணி மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் வேலை வெளிக்கள தொழிலாளர்கள் 05 பேர் மற்றும் சுகாதார தொழிலாளர் ஒருவருக்கு பதவிக்கு உரித்துடைய அங்கீகரிக்கப்பட்ட கடமைக்கு புறம்பாக ஏனைய கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,058,173 தொகை சம்பளங்கள் மற்றும் படிகள் என சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | சேவையின் தேவைப்பாட்டின் மீது கடமைச் சாட்டுதல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |